N

# இரண்டாம் இடைப்பருவத் தேர்வு, நவம்பர் - 2019

## பத்தாம் வகுப்பு

நேரம் : 1.15 மணி சமூகஅறிவியல் மதிப்பெண்கள்: 50

### பகுதி - I

குறிப்பு: i) இப்பகுதியில் உள்ள ஏழு வினாக்களுக்கும் விடையளிக்கவும். ii) கொடுக்கப்பட்டுள்ள நான்கு மாற்று விடைகளில் மிகவும் பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுத்து குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.

7×1=7

1) வேலூர் கோட்டையில் புதிய இராணுவ விதிமுறைகளை அறிமுகப்படுத்தக் காரணமாயிருந்த தலைமை தளபதி யார்?
அ) கர்னல் பேன்கோர்ட் ஆ) மேஜர் ஆம்ஸ்ட்ராங்
இ) சர் ஜான் கிரடாக் ஈ) கர்னல் அக்னியூ

2) கூற்று: பிரிட்டிஷ் அரசு 1857ஆம் ஆண்டின் கிளர்ச்சியை இரும்புக்கரம் கொண்டு அடக்கியது.
காரணம்: மையப்படுத்தப்பட்ட நிர்வாகம் இல்லாததால் கிளர்ச்சி தோல்வி கண்டது.
அ) கூற்று மற்றும் காரணம் இரண்டுமே் தவறு
ஆ) கூற்று தவறு காரணம் சரி
இ) கூற்று மற்றும் காரணம் இரண்டுமே சரி. அத்துடன் காரணம் கூற்றுக்கான சரியான விளக்கமாகும்.
ஈ) கூற்று மற்றும் காரணம் இரண்டுமே சரி. ஆனால் காரணம் கூற்றுக்கான சரியான விளக்கம் இல்லை.

3) தமிழ்நாட்டில் அதிக பரப்பளவில் மாங்குரோவ் காடுகள் காணப்படும் மாவட்டம் எது?
அ) இராமநாதபுரம் அ) நாகப்பட்டினம் இ) கடலூர் ஈ) தேனி

4) தமிழ்நாட்டில் அதிக பரப்பளவில் காடுகளைக் கொண்ட மாவட்டம் ________
அ) தர்மபுரி ஆ) வேலூர் இ) திண்டுக்கல் ஈ) ஈரோடு

5) பின்வருவனவற்றைக் காலவரிசைப்படுத்தி கீழே கொடுக்கப்பட்டுள்ள குறியீடுகளிலிருந்து சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்.
i) பஞ்சசீலம் ii) பொக்ரானில் அணுவெடிப்புச் சோதனை
iii) 20 ஆண்டுகள் ஒப்பந்தம் iv) முதல் அணுவெடிப்புச் சோதனை
அ) (i),(iii),(iv),(ii) ஆ) (i),(ii),(iii),(iv) இ) (i),(ii),(iv),(iii) ஈ) (i),(iii),(ii),(iv)

6) இந்தியா - வங்காளதேசமிடையே கங்கை நதி நீரைப் பகிர்ந்து கொள்ள 'பராக்கா ஒப்பந்தம்' எந்த ஆண்டு கையெழுத்தானது?
அ) 1977 ஆ) 1981 இ) 1979 ஈ) 1980

7) நீட்டிக்கப்பட்ட உதவி பொதுச்சட்டம் 480ஐ கொண்டு வந்த நாடு ________
அ) அமெரிக்கா ஆ) இந்தியா இ) சிங்கப்பூர் ஈ) இங்கிலாந்து

### பகுதி - II

எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும். 5×2=10

8) களக்காடு போரின் முக்கியத்துவம் யாது?
9) 1857 ஆம் ஆண்டின் கான்பூர் படுகொலை பற்றி குறிப்பு வரைக.
10) 'தேசி' என்றால் என்ன?
11) தமிழ்நாட்டின் முக்கிய தீவுகளைக் குறிப்பிடுக.
12) பஞ்சசீல கொள்கைகளில் ஏதேனும் நான்கினைப் பட்டியலிடுக.
13) இந்தியாவின் அண்டை நாடுகளின் பெயர்களை எழுதுக.
14) பசுமை புரட்சியின் விளைவுகள் யாவை?
15) பண்டங்கள் மற்றும் பணிகள் வரி - சிறுகுறிப்பு வரைக.

Kindly send me your district question papers to our whatsapp number: 7358965593

www.Padasalai.Net www.CBSEtips.in



## பகுதி - III

எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும். 5×5=25

16) கோடிட்ட இடங்களை நிரப்புக
   1) வேலுநாச்சியாரும், அவரது மகளும் எட்டாண்டுகளாக _______ பாதுகாப்பில் இருந்தனர்.
   2) சோட்டாநாக்பூர் பகுதியில் நடந்த மிகப்பெரிய பழங்குடியினர் கிளர்ச்சி _______
   3) கிழக்கு தொடர்ச்சி மலையின் தென்பகுதியில் உள்ள உயரமான சிகரம் _______ ஆகும்.
   4) இடி மின்னல் நிலம் என்று அறியப்படும் நாடு _______ ஆகும்.
   5) _______ ஆம் ஆண்டில் தேசிய உணவு பாதுகாப்புச் சட்டம் இந்திய நாடாளுமன்றத்தால் நிறைவேற்றப்பட்டது.

17) பொருத்துக.

| | | |
|---|---|---|
| 1) தீர்த்தகிரி | - | முன் பருவ மழை |
| 2) பானர்மென் | - | டிடு மீர் |
| 3) முண்டா கிளர்ச்சி | - | அக்டோபர் முதல் நவம்பர் வரை |
| 4) மாஞ்சாரல் | - | இராமலிங்கனார் |
| 5) வடகிழக்கு பருவக்காற்று | - | ஓடாநிலை |

18) அ) வேறுபடுத்துக.
   1) தமிழகத்தின் மேற்கு தொடர்ச்சி மலைகள் மற்றும் கிழக்கு தொடர்ச்சி மலைகள்
   2) தமிழகத்தின் பசுமை மாறாக் காடுகள் மற்றும் வெப்பமண்டல இலையுதிர்க் காடுகள்

   ஆ) காரணம் கூறுக: கடலூர் ஒரு பல்வழி பேரழிவு மண்டலம்

19) வேலூரில் 1806இல் வெடித்த புரட்சியின் கூறுகளை விளக்குக.

20) பாலைவனமாதல் என்றால் என்ன? தமிழ்நாட்டில் பாலைவனமாதலால் பாதிக்கப்பட்ட பகுதிகள் குறித்து விவரி?

21) அணிசேரா இயக்கம் பற்றி விரிவான குறிப்பு எழுதுக.

22) கீழ்காண்பனவற்றிற்கு காலக்கோடு வரைக.
   1920 முதல் 1950 வரையிலான ஐந்து முக்கிய நிகழ்வுகளை காலக்கோட்டில் எழுதுக.

## பகுதி - IV

ஏதேனும் ஒரு தலைப்பின் கீழ் வினாவிற்கு விடையளிக்கவும் 1×4=4

23) அ) தீரன் சின்னமலை
   1) தீரன் சின்னமலை எப்போது பிறந்தார்?
   2) 'சின்னமலை' என்ற பட்டப்பெயரை அவர் எவ்வாறு பெற்றார்?
   3) திப்பு சுல்தானின் திவானின் பெயர் யாது?
   4) அவர் எங்கு, ஏன் தூக்கிலிடப்பட்டார்?

(அல்லது)

   ஆ) 1857 ஆம் ஆண்டின் கிளர்ச்சி
   1) 1857 ஆம் ஆண்டின் கிளர்ச்சி ஏற்படக் காரணமாக அமைந்த நிகழ்வில் தனது அதிகாரியை தாக்கியவர் யார்?
   2) தில்லியில் ஷாஹின்ஷா இ-ஹிந்துஸ்தான் என்று அழைக்கப்பட்டவர் யார்?
   3) 1857 ஆம் ஆண்டின் கொடுமைகளை பற்றிய செய்தியை லண்டன் டைம்ஸ் நாளேட்டில் வெளியிட்ட பத்திரிக்கையாளர் யார்?
   4) அரசியின் பேரறிக்கையில் சமயம் தொடர்பான விஷயங்கள் பற்றி என்ன கூறப்பட்டது?

24) கொடுக்கப்பட்டுள்ள தமிழ்நாடு வரைபடத்தில் பின்வரும் பகுதிகளுள் ஏதேனும் நான்கினை குறிக்கவும். 4×1=4

| | | |
|---|---|---|
| 1) காவிரி ஆறு | 2) மலை மண் | 3) வண்டல் மண் |
| 4) வெள்ளாறு | 5) கிழக்கு தொடர்ச்சி மலை | 6) வருசநாடு மலை |
| 7) ஆனை மலை | 8) தாமிரபரணி | |

*********

Kindly send me your district question papers to our whatsapp number: 7358965593

# ஸ்ரீ வித்யபாரதி மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி

சக்கராம்பாளையம், அகரம்(அஞ்சல்),
எலச்சிப்பாளையம், திருச்செங்கோடு(வட்டம்),
நாமக்கல் (மாவட்டம்)-637 202.
அலைபேசி : 99655-31727

பத்தாம் வகுப்பு இரண்டாம் இடைப்பருவத்தேர்வு, நவம்பர் - 2019

## விடைக்குறிப்பு

பாடம்: சமூக அறிவியல் மதிப்பெண்:50

| வினா எண் | பாடப்பொருள் | மதிப்பெண் |
|---|---|---|
| I. | பகுதி - I<br>உரிய விடையைக் குறியீட்டுடன் தேர்ந்தெடுத்து எழுதுக. | 7x1=7 |
| 1 | இ) சர் ஜான் கிரடாக் | 1 |
| 2 | இ) கூற்று மற்றும் காரணம் இரண்டுமே சரி. அத்துடன் காரணம் கூற்றுக்கான சரியான விளக்கமாகும். | 1 |
| 3 | இ) கடலூர் | 1 |
| 4 | அ) தர்மபுரி | 1 |
| 5 | * i) iv) iii) ii) | 1 |
| 6 | அ) 1977 | 1 |
| 7 | அ) அமெரிக்கா | 1 |
| II. | பகுதி - II(எவையேனும் 5 வினாக்களுக்கு மட்டும்) | 5X2=10 |
| 8 | **களக்காடு போரின் முக்கியத்துவம் யாது?**<br>❖ நவாப் கூடுதல் படைகளை மாபூஸ்கானுக்கு அனுப்பி திருநெல்வேலிக்குச் செல்லும் படையை பலப்படுத்தினார். மேலும் கம்பெனியின் 1000 சிப்பாய்களோடு நவாபால் அனுப்பப்பட்ட 600க்கும் மேற்பட்ட படை வீரர்களையும் மாபூஸ்கான் பெற்றார். மேலும் அவருக்கு கர்நாடகப் பகுதியிலிருந்து குதிரைப் படை மற்றும் காலாட்படையின் ஆதரவும் இருந்தது. மாபூஸ்கான் களக்காடு பகுதியில் தனது படைகளை நிலைநிறுத்தும் முன்பாக திருவிதாங்கூரின் 2000 வீரர்கள் பூலித்தேவரின் படைகளோடு இணைந்தனர். களக்காட்டில் நடைபெற்றப் போரில் மாபூஸ்கானின் படைகள் தோற்கடிக்கப்பட்டன. | 2 |

| | | |
|---|---|---|
| 9 | 1857 ஆம் ஆண்டின் கான்பூர் படுகொலை பற்றி குறிப்பு வரைக .<br>❖ 1857 ஆம் ஆண்டு கிளர்ச்சியின் முக்கிய அத்தியாயமாக இருப்பது கான்பூர் முற்றுகையாகும்<br>❖ கான்பூரில் சுற்றிவளைக்கப்பட்ட கம்பெனிப் படைகளும் இராணுவ வீரர்களும் நீட்டிக்கப்பட்ட சுற்றிவளைப்புக்கு தயாராக இல்லாததால் நானா சாகிப் தலைமையிலான கிளர்ச்சிப் படைகளின் கீழ் சரணடைந்தனர்.<br>❖ அவர்கள் அலகாபாத்துக்குத் திரும்பிச்செல்ல பாதுகாப்பான வழி அமைக்கப்பட்டடது<br>❖ அவர்கள் பயணம் செய்த படகுகள் தீயிடப்பட்டு எரிக்கப்பட்டு அதனை அடுத்து கான்பூர் தளபதி மேஜர் ஜெனரல் ஹக் வீலர் உள்பட பெரும்பாலும் அதில் பயணித்த அனைவரும் உயிரிழந்தனர். | 2 |
| 10 | 'தேரி' - என்றால் என்ன?<br>❖ இராமநாதபுரம் மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களில் கடற்கரையோரங்களில் உருவாக்கப்பட்ட மணல் குன்றுகள் 'தேரி' என்று அழைக்கப்படுகிறது | 2 |
| 11 | தமிழ்நாட்டின்முக்கிய தீவுகளைக் குறிப்பிடுக.<br>❖ பாம்பன், முயல் தீவு, குருசடை, நல்லதண்ணி தீவு, புள்ளி வாசல், ஸ்ரீரங்கம், உப்புதண்ணித் தீவு, தீவுத்திடல், காட்டுப்பள்ளித் தீவு, குவிப்பில் தீவு மற்றும் விவேகானந்தர் நினைவுப்பாறை ஆகியன தமிழ்நாட்டில் உள்ள முக்கிய தீவுகள் ஆகும்.. | 2 |
| 12 | பஞ்சசீல கொள்கைகளில் ஏதேனும் நான்கினைப் பட்டியலிடுக.<br>❖ ஒவ்வொரு நாட்டின் எல்லையையும் இறையாண்மையையும் பரஸ்பரம் மதித்தல்<br>❖ பரஸ்பர ஆக்கிரமிப்பின்மை<br>❖ பரஸ்பர உள்நாட்டு விவகாரங்களில் தலையிடாதிருத்தல்<br>❖ பரஸ்பர நலனுக்காக சமத்துவம் மற்றும் ஒத்துழைத்தல்<br>❖ அமைதியாக சேர்ந்திருத்தல் | 2 |
| 13 | இந்தியாவின் அண்டைநாடுகளின் பெயர்களை எழுதுக.<br>❖ ஆப்கானிஸ்தான்<br>❖ பாகிஸ்தான்<br>❖ பூடான்<br>❖ நேபாளம்,<br>❖ வங்காள தேசம்<br>❖ மியான்மர்<br>❖ இலங்கை,<br>❖ மாலத்தீவு . | 2 |
| 14 | பசுமைபுரட்சியின் விளைவுகள் என்ன?<br>❖ உணவு தானிய உற்பத்தியில் தன்னிறைவு பெறவழி வகுத்தது. | |

| | | |
|---|---|---|
| | ❖ உயர் ரக விதைகளான (HYV) பயன்படுத்துதல்.<br>❖ அரிசி மற்றும் கோதுமை உணவு தானியங்கள் பயிரிடப்பட்டபகுதியில் உற்பத்தியை அதிகரித்தல்<br>❖ மானிய விலையில் ரசாயன உரங்கள் கிடைப்பதை உறுதி செய்தல். | 2 |
| 15 | பண்டங்கள் மற்றும் பணிகள்வரி - சிறு குறிப்பு வரைக.<br>❖ பண்டங்கள் மற்றும் பணிகள் வரி என்பது மறைமுகவரிகளில் ஒன்றாகும்.<br>❖ இவ்வரி இந்தியப்பாராளு மன்றத்தில் மார்ச்29,2017ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்டது<br>❖ மேலும் ஜூலை1, 2017 முதல் அமுல்படுத்தப்பட்டு செயல்பட்டு வருகிறது.<br>இதன் குறிக்கோள் "ஒரு நாடு-ஒரு அங்காடி-ஒரு வரி" என்பதாகும். | 2 |
| III. | பகுதி - III(எவையேனும் 5 வினாக்களுக்கு மட்டும்) | 5X5=25 |
| 16 | கோடிட்ட இடங்கள்<br>1) கோபால நாயக்கர்<br>2) கோல் கிளர்ச்சி<br>3) சோலைகரடு<br>4) பூடான்<br>5) 2013 | 1<br>1<br>1<br>1<br>1 |
| 17 | பொருத்துக.<br>1) தீர்த்தகிரி - ஓடாநிலை<br>2) பானர்மென் - இராமலிங்கனார்<br>3) முண்டா கிளர்ச்சி - டிடுமீர்<br>4) மாஞ்சாரல் - முன்பருவமழை<br>5) வடகிழக்கு பருவக்காற்று - அக்டோபர் முதல் நவம்பர் வரை | 1<br>1<br>1<br>1<br>1 |
| 18 | அ) வேறுபடுத்துக<br>1) தமிழகத்தின் மேற்கு தொடர்ச்சி மலைகள் | 2 |

| வ.எண் | மேற்கு தொடர்ச்சி மலைகள் | கிழக்கு தொடர்ச்சி |
|---|---|---|
| 1 | மேற்கு தொடர்ச்சிமலை தொடர்ச்சியானது | கிழக்குதொடர்ச்சி மலை தொடர்ச்சியற்றது |
| 2 | இம்மலைத் தொடரின் உயரம் 2000 மீட்டர் முதல் 3000 மீ வரை வேறுபட்டுள்ளது | இம்மலைத் தொடரின் உயரம் 1100 மீட்டர் முதல் 1600 மீட்டர் வரை மாறுபடுகிறது. |

| | | |
|---|---|---|
| 3 | இம்மலைத் தொடரில் பாலக்காட்டு கணவாய்,செங்கோட்டைக் கணவாய், ஆரல் வாய்மொழி கணவாய் மற்றும் அச்சனகோவில் கணவாய் ஆகியன முக்கிய கணவாய்களாகும். | இக்குன்றுகள் பீடபூமியை சமவெளியில் இருந்து பிரிக்கின்றன. |
| 4 | நீலகிரிஆனைமலை, பழனிமலை, ஏலக்காய் மலை, அகத்தியர் மலை,வருசநாடு மற்றும்ஆண்டிப்பட்டி மலைகள் முக்கிய மலைளாகும். | ஜவ்வாது மலை, சேர்வராயன் மலை, கல்வராயன் மலை, கொல்லி மலை மற்றும் பச்சைமலை ஆகியன முக்கிய மலைகளாகும். |

2) தமிழகத்தின் பசுமைமாறாக் காடுகள் மற்றும் வெப்பமண்டல இலையுதிர் காடுகள்

| வ.எண் | பசுமைமாறாக் காடுகள் | வெப்பமண்டல இலையுதிர் காடுகள் |
|---|---|---|
| 1 | இக்காடுகள் அதிகம் மழைபெறம் பகுதிகளில் காணப்படுகின்றன. | இக்காடுகள் பசுமை மாறாக் காடுகள் மற்றும் அரை பசுமை மாறா காடுகளின் விளிம்புப் பகுதியில் காணப்படுகின்றன. |
| 2 | இலவங்க மரம், மலபார், கருங்காலி மரம், இந்திய மகோகனி, குரங்கு தேக்கு போன்ற மரங்கள் காணப்படும். | பருத்திப்பட்டு மரம், இலவம், கடம்பா, வாகை, வெக்காளி போன்ற மரங்கள் காணப்படும். |
| 3 | இவை அடர்ந்த மற்றும் மரக்கிளைஅடுக்குகள்கொண்டதாக காணப்படுகின்றன | இக்காடுகளில் உள்ள மரங்கள் கோடை பருவங்களில் தங்களது இலைகளை உதிர்த்து விடுகின்றன. |

2

1

ஆ) கடலூர் ஒரு பல்வழி பேரழிவு மண்டலம்.

i. கடலூர் வெப்பமண்டல சூறாவளி , வெள்ளப்பெருக்கு, மற்றும் சுனாமி போன்ற இயற்கைப் பேரிடர்களால் 2004இல் பாதிப்படைந்தது.

ii. மேலும் இந்த பகுதியில் 11 ஆகஸ்ட் 2011 இல் நிலநடுக்கம் ஏற்பட்டது.

19 வேலூரில் 1806 இல் வெடித்த புரட்சியின் கூறுகளை விளக்குக.

❖ தென்தமிழகத்தின் பாளையக்காரர்கள் அனைவரையும் ஒடுக்குவதற்கு முன்பாகவோ கிழக்கிந்திய கம்பெனி 1792 இல் திப்புவோடு ஏற்பட்ட போரின் முடிவில் சேலம் மற்றும் திண்டுக்கல் வருவாய் மாவட்டங்களைப் பெற்றுக்கொண்டது 1799 இல் நடந்த ஆங்கிலேய -மைசூர் போரின் முடிவில் கோயம்புத்தூர் இணைக்கப்பட்டது 1798 ஆம் ஆண்டு தஞ்சாவூரின் அரசர் அப்பகுதியில் இறையாண்மை உரிமையை

ஆங்கிலேயருக்கு விட்டுக்கொடுத்து அதே ஆண்டு கப்பம்கட்டும் நிலைக்கும் தள்ளப்பட்டார்

இந்திய வீராகளின் மனக்குறை

- ஆனாலும் எதிர்ப்பு அடங்கிவிடவில்லை, வெளியேற்றப்பட்ட சிறற்ரசர்களும் நிலச்சுவான்தார்களும் கம்பெனி அரசுக்கு எதிராக எதிர்காலத் திட்டம் குறித்து நிதானமாக சிந்தித்துக்கொண்டே இருந்தார்கள். இதன் விளைவாக வெளிப்பட்டது 5
- 1806 புரட்சியின் இறுதி நிகழ்வு அந்நிய ஆட்சியை தூக்கி எறிவதை நோக்கமாக கொண்டிருந்தது.
- பிரிட்டிஷாரின் இராணுவத்தில் சிப்பாயாகப் பணியாற்றியவர்களுக்கு குறைவான ஊதியமே வழங்கப்பட்டது. பதவி உயர்வுக்கான வாய்ப்புகள் குறைவாகவே இருப்பது ஆகியவற்றை நினைத்து கடுமையான கோபத்துடனே பணியாற்றிக் கொண்டிருந்தார்கள். தங்களின் சமூக மற்றும சமய நம்பிக்கைகளுக்கு ஆங்கிலேய அதிகாரிகள் குறைவான மதிப்பளித்ததும் மேலும் அவர்களின் கோபத்தை வலுப்படுததியது. விவசாயப் பின்னணி கொண்ட வீரர்களின் வேளாண் சிக்கலும் அவர்களை மேலும் சிரமப்படுத்தியது. 1805 இல் பஞ்சம் ஏற்பட்டதாலும் பல சிப்பாய்களின் குடும்பங்கள் கடும் பொருளாதார நெருக்கடியைச் சந்தித்தன .
- திப்புவின் மகன்களும் அவர்தம் குடும்பத்தினரும் வேலூர் கோடட்டையில் சிறைவைக்கப்ட்டவேலையில் தங்கள் அதிருப்தியை வெளிப்படுத்தும் அந்த வாய்ப்பு கூடிவந்தது புரட்சி ஏற்படுவதற்கான இயக்க சக்தியாக தலைமைத்தளபதி சர்ஜான் கிரடாக் வெளியிட்ட புதிய இராணுவ விதிமுறை அமைந்தது.

புரட்சி வெடித்தல்

- 1806 ஜுலை 10 அன்று அதிகாலையிலேயே முதல் மற்றும் இருபத்தி மூன்றாம் படைப்பிரிவுகளின் இந்திய சிப்பாய்கள் துப்பாக்கிகளின் முழக்கத்தோடு புரட்சியில் இறங்கினர் . கோட்டைக் காவற்படையின் உயர் பொறுப்புவகித்த கர்னல் பேன்கோர்ட் என்பவர்தான் முதல் பலியானார். அடுத்தததாக இருபத்தி மூன்றாம் படைப்பிரிவைச் சேர்ந்த கர்னல் மீக்காரஸ் கொல்லப்பட்டார் கோட்டையைக் கடந்து சென்று கொண்டிருந்தத மேஜர் ஆர்ம்ஸ்ட்ராங் துப்பாக்கிகளின் முழக்கத்தைக் கேட்டார். சூழலை விசாரித்தறிய முற்பட்ட அவரது உடல் தோட்டாக்களால் துளைக்கப்பட்டது. ஏறத்தாழ பனிரெண்டுக்கு அதிகமான அதிகாரிகள் அடுத்த ஒரு மணி நேரத்துக்குள் கொல்லப்பட்டார்கள் அவர்களில் லெப்டினென்ட் எல்லியும், லெப்டினென்ட் பாப்ஹாமும் பிரிட்டிஷ் மன்னரின் படைப்பிரிவைச்

| | | |
|---|---|---|
| | சேர்ந்தவர்களாவர். | |
| 20 | பாலைவனமாதல் என்றால் என்ன? தமிழ்நாட்டில் பாலைவனமாதலால் பாதிக்கப்பட்ட பகுதிகள் குறித்து விவரி.<br>i. பாலைவனமாதல் என்பது வறண்ட ஓரளவு வறண்ட அல்லது ஈரப்பதம் குறைவாக உள்ள பகுதிகள் காலநிலை மாற்றம் உள்ளிட்டபல்வேறு காரணங்களால் தரம் குறைவதைக் குறிக்கும்.<br>ii. மனிதச் செயற்காடுகளே இதற்கு முதன்மையான காரணமாகக் கூறப்படுகின்றது.<br>iii. தற்காலத்தில் பாலைவனமாதல் மிகவும் வேகமாக நடைபெறுகிறது.<br>iv. இது வழக்கமாக மக்கள் தொகைப் பெருக்கத்தால் ஏற்படுவதைக் காட்டிலும் வேகமானதாகும்.<br>தமிழ்நாட்டில் பாலைவனமாதல் பாதிக்கப்பட்ட பகுதிகள்<br>i. தமிழ்நாடு எதிர்கொள்ளும் முக்கிய பிரச்சனைகளில் ஒன்று பாலைவனமாதலாகும்.<br>ii. இந்திய விணவெளி ஆராய்ச்சி நிறுவனம் தயாரித்த பாலைவனமாதல் நில வரைபடத்தின்படி மொத்த நிலப்பரப்பில் சுமார் 12 சதவீதநிலப்பகுதி பாலைவனமாதல் மற்றும் நில சீரழிவுடையதாதல் என்ற இருநிலைகள் கண்டறியப்பட்டுள்ளது.<br>iii. தேனி, நீலகிரி, கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்கள் இவற்றினால் பாதிப்புக்குள்ளாகின்ற பகுதிகளாகும்.<br>iv. தேனி மற்றும் இராஜபாளையம் பகுதிகளில் சுமார் 1200 ஹெக்டர் நிலம் காற்றாடி மணல் படிவுகளால் பாதிக்கப்பட்டுள்ளது. . | 5 |
| 21 | அணிசேரா இயக்கம் பற்றி விரிவான குறிப்பு எழுதுக<br>I. 'அணிசேரா இயக்கம் என்ற சொல் 1953 இல் ஐ.நா. சபையில் உரையாற்றிய வி.கிருஷ்ணமேனன் என்பவரால் உருவாக்கப்பட்டது.<br>II. அணிசேராமை என்பது இந்திய வெளியுறவுக் கொள்கையின் முக்கிய அம்சமாக விளங்குகிறது.<br>III. இதன் நோக்கம் ராணுவக்கூட்டணியில் சேராமல் வெளிநாட்டு விவகாரங்களில் தேசிய சுதந்திரத்தைப் பராமரித்தலாகும். பன்முகக்கூட்டரங்கில் இது மிகப்பெரிய அரசியல் குழுவாக விளங்குகிறது.<br>IV. அணிசேரா இயக்கமானது 120 உறுப்பு நாடுகளையும் 17 நாடுகளைப் பார்வையாளராகவும் 10 சர்வதேச நிறுவனங்களையும் கொண்டுள்ளது.<br>V. வளர்ச்சி குறைந்த நாடுகளிடையே பொருளாதார ஒத்துழைப்பிற்கான அடித்தளத்தை நிறுவுவதில் அணிசேரா நாடுகள் வெற்றி அடைந்துள்ளன. மற்றொரு குறிப்பிடத்தக்க உண்மை என்னவென்றால் இது ஒரு அரசியல் இயக்கத்திலிருந்து பொருளாதார இயக்கமாக மாற்றம் கொண்டுள்ளது.<br>அணிசேரா இயக்கத்தின் நிறுவனத் தலைவர்கள்: | 5 |

| | | |
|---|---|---|
| | இந்தியாவின் ஜவகர்லால் நேரு, யுகோஸ்லாவியாவின் டிட்டோ, எகிப்தின் நாசர், இந்தோனேசியாவின் சுகர்னோ மற்றும் கானாவின் குவாமே நிக்ரூமா ஆகியோராவர்<br>**புதிய சவால்கள்மற்றும் கொள்கைமாற்றங்கள்**<br>I. **இந்தியா அணிசேரா இயக்கத்தில் இருந்தபோதும் சோவியத்யூனியனுடன் 1971ஆம் ஆண்டில் இந்திய - சோவியத் ஒப்பந்தத்தின் (20 ஆண்டு கால ஒப்பந்தமான அமைதி, நட்புறவு மற்றும் ஒத்துழைப்பு) மூலம் இணைந்தது.**<br>❖ **பின்னர் இந்தியா ராணுவ நவீனமயமாக்கலை மேற்கொண்டது. சீனா 1964ஆம் ஆண்டு லாப் நார் (Lop Nor) என்னுமிடத்தில் மேற்கொண்டஅணு சோதனைக்குப் பதிலடயாக இந்தியா தனது முதல் பூமிக்கடியிலான அணு சோதனைத் திட்டத்தினை 1974இல் நடத்தியது. (நிலத்தடி அணு வெடிப்புத்திட்டம் / Subterranean Nuclear Explosions Project)** | |
| 22 | காலக்கோடு 1920 முதல் 1950 வரை ( ஏதேனும் ஐந்து)<br>அளவுத்திட்டம் - 1 அலகு = **பத்**தாண்டுகள் -<br> | 5 |
| | **பகுதி - IV ஏதேனும் ஒரு தலைப்பின் கீழ் வினாவிற்கு விடையளிக்கவும்** | **1x4=4** |
| 23 | 1. **அ) தீரன் சின்னமலை**<br>**1) தீரன் சின்னமலை எப்போது பிறந்தார்?** | |

1756

2) 'சின்னமலை' என்ற பட்டப்பெயரை அவர் எவ்வாறு பெற்றார்? 4

கொங்குப்பகுதியில் குடும்ப மற்றம் நிலப்பிரச்சனைகளுக்குத தீர்வு வழங்குதல் போன்ற செயல்களில் ஈடுபட்டுவந்தார். அப்பகுதி மைசூர் சுல்தானின்கட்டுப்பாட்டில் இருந்தது. திப்புவின் திவான் முகம்மது அலி என்பவரால் வரி வசூலிக்கப்பட்டது ஒரு முறை திவான் வசூலிக்கப்பட்ட வரிப்பணத்தோடு மைசூருக்குத் திரும்பிக்கொண்டிருந்த போது, தீர்த்தகிரி அவரை வழிமறித்து வரிப்பணம் முழுவதையும் பறித்துக்கொண்டார். இவர் முகம்மது அலியிடம் சிவமலைக்கும், சென்னிமலைக்கு இடையே இருந்த 'சின்னமலையே' வரிப்பணத்தைப் பிடுங்கிக்கொண்டதாக சுல்தானுக்குப் போய்ச் சொல் என்று அறிவுறுத்தினார். அதன் பிறகே 'தீரன் சின்னமலை' என்று அவர் அழைக்கப்படலானார்.

3) திப்பு சுல்தனின் திவானின் பெயர் யாது?

முகம்மது அலி

4) அவர் எங்கு ஏன் தூக்கிலிடப்பட்டார்? 4

பிரெஞ்சுக்காரர்களால் பயிற்சியளிக்கப்பட்ட தீரன் கொங்குமண்டலத்தைச் சார்ந்த ஆயிரக்கணக்கான இளைஞர்களோடு திப்புவுடன் இணைந்து பிரட்டிஷாருக்கு எதிராகச் சண்டையிட்டார். திப்புவின் இறப்பிற்குப் பிறகு ஒரு கோட்டையை எழுப்பிய தீரன் சின்னமலை அவ்விடத்தைவிட்டு வெளியேறாமல் ஆங்கிலேயரை எதிர்த்துப் போராடினார். எனவே அவ்விடம் 'ஓடாநிலை' என்றழைக்கப்படுகிறது அவர் பிடிபடாமலிருப்பதற்காக கொரில்லாப் போர் முறைகளைக் கையாண்டார். இறுதியாக அவரையும் அவர் சகோதரர்களையும் கைது செய்த ஆங்கிலேயர்கள் அவர்களை சங்ககிரியில் சிறைவைத்தனர். ஆங்கிலேய ஆட்சியை ஏற்க வற்புறுத்தப்பட்டபோது அவர்கள் அதற்கு இணங்க மறுத்தனர். அதனால் 1805 ஜீலை 31 அன்று சங்ககிரி கோட்டையின் உச்சியில் அவர்கள் தூக்கிலிடப்பட்டனர்.

ஆ) 1857 ஆம் ஆண்டின் கிளர்ச்சி

1) 1857ஆம் ஆண்டின் கிளர்ச்சி ஏற்படக் காரணமாக அமைந்த நிகழ்வில் தனது அதிகாரியை தாக்கியவர் யார்?

மங்கள் பாண்டே என்ற பெயர் கொண்ட சிப்பாய் தனது ஐரோப்பிய அதிகாரியைத் தாக்கினார்

2) தில்லியில் ஸாஹின்ஷா இ-ஹிந்துஸ்தான் என்று அழைக்கப்பட்டவர் யார்?

இரண்டாம் பகதூர்ஷா

3) 1857ஆம் ஆண்டின் கொடுமைகளை பற்றிய செய்தியை லண்டன் டைம்ஸ் நாளேட்டில் வெளியிட்ட பத்திரிகையாளர் யார்?

வில்லியம் ஹோவர்ட் ரஸ்ஸல்

4) அரசியின் பேரறிக்கையில் சமயம் தொடர்பான விஷயங்கள் பற்றி என்ன கூறப்பட்டது?

| | | |
|---|---|---|
| | இந்திய மக்களுக்கு விக்டோரியா அரசியார் செய்த அறிவிப்பில் பாரம்பரிய நிறுவனங்கள் மற்றும் மதம் தொடர்பான விஷயங்களில் ஆங்கிலேய அரசு தலையிடாது என்று தெரிவித்தார் | |
| 24 | கொடுக்கப்பட்டுள்ள தமிழ்நாடு வரைபடத்தில் பின்வரும் பகுதிகளுள் ஏதேனும் நான்கினைக் குறிக்கவும்  | 4 |



Kindly send me your district question papers to our whatsapp number: 7358965593

# DEPARTMENT OF SOCIAL SCENCE


## ஸ்ரீ வித்யபாரதி மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி

சக்கராம்பாளையம், அகரம்(அஞ்சல்),
எலச்சிப்பாளையம், திருச்செங்கோடு(வட்டம்),
நாமக்கல் (மாவட்டம்)-637 202.
அலைபேசி : 99655-31727


ஸ்ரீ வித்யபாரதி
www.Padasalai.Net